# செய்தி வெளியீடு

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்

### 2016 முதலாம் காலாண்டு

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-11-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

…………………………………………………………………………………………………………

இலங்கையின், 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிட்ட அறிவிப்பின்படி, இலங்கையின் மொத்த பொருளாதார உற்பத்தி, 2016 முதலாம் காலாண்டின் (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) நிலையான (2010) விலையில் 2,088,024 ரூபா மில்லியன்களாக அதிகரித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி 2015 முதலாம் காலாண்டில் 1,978,609 ரூபா மில்லியன்களாக பதிவு செய்ததுடன், 2016 முதலாம் காலாண்டில் 5.5 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை காட்டுகிறது.

2016 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்குகளை முறையே 7.4 சதவீதம், 31.6 சதவீதம், 52.4 சதவீதம் மற்றும் 8.5 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுப் பொழுதில், விசேடமாக கைத்தொழில், சேவைகள் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுகின்றன. 2015 முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது அந்நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதங்கள் முறையே 8.3, 4.9 சதவீதங்களாகும். ஆனால் விவசாய நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதம் சிறிய அளவான 1.9 சதவீத வளர்ச்சி வீதத்தையே காட்டியிருக்கிறது.

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், ‘காய்கறிகளின் வளர்ச்சி’ , ‘எண்ணைய் சார்ந்த பழவகைகளின் வளர்ச்சி ’ தேங்காய் உள்ளடங்கலாக, மற்றும் ‘கால்நடை உற்பத்தி ’ என்பன மிக உயர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது: அவை முறையே 2015 ஆம் ஆண்டின் அதற்குரிய காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2016 ஆம் ஆண்டின் இக்காலப் பகுதியில் 16.3 சதவீத , 10.0 சதவீத, மற்றும் 5.1 சதவீதங்களாகும். இவ்வேளையில் ‘தேயிலையின் வளர்ச்சி’, இன் சேர்க்கப்பட்ட பெறுமதி

இக்காலாண்டுக்கிடையில் 11.6 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன், 'இறப்பர் வளர்ச்சி', கடல் மீன்பிடியும் மிகச் சிறிய 2.6 சதவீதமான வீழ்ச்சி வீதத்தை ஒவ்வொரு நடவடிக்கையும் எதிர்கொள்கிறது.

முக்கியமாக இந்த காலாண்டில் கைத்தொழில் துறைகளின் பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 31.6 சதவீதம் வரை உயர்ந்துள்ளதுடன் 8.3 சதவீத வளர்ச்சி வீதத்தை ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கையும் பதிவு செய்கிறது. கைத்தொழில் துறையின் பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்புடன், 2015 முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இக் காலாண்டில் 12.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுகின்றது. குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், உப பிரிவுகளான, 'மின்வலு,வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல்', 'இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் உற்பத்தி', 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி ' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி' என்பன முறையே 10.1 சதவீத, 7.0 சதவீத, 1.2 சதவீத மற்றும் 1.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களை 2016 ஆம் காலப் பகுதியில் காட்டுகின்றன. இத்துடன் 'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்' நடவடிக்கை 1.5 சதவீத வீழ்ச்சியை இவ் இடைவெளிக் காலத்தை கருதும் போது பதிவு செய்துள்ளது.

2015 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சேவைத் துறையின் நடவடிக்கைகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை (52.4 சதவீத) வழங்குவதுடன், 4.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளின் 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், 'கல்விச் சேவைகள்', மற்றும் 'வேறு தனிப்பட்ட சேவைகள் நடவடிக்கைகள்' குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 15.9 சதவீத, 5.7 சதவீத 5.9 சதவீத மற்றும் 6.7 சதவீதத்தை 2015 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது இது பதிவு செய்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2016 ஆம் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
**பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும்புள்ளிவிபரத் திணைக்களம்**

---

***இந்த ஊடக அறிக்கையை 2016 ஜூன் 15 ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முதல் பிரசுரிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்க.***